10 - A

<u>நகர் ஊரமைப்பு துறை</u>

அனுப்புநர்
திரு. .பாஸ்கரத்தொண்டைமான்,
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
56/ஏ,அரசு மருத்துவமனை சாலை,
விழுப்புரம் மண்டலம்,
விழுப்புரம் மாவட்டம்.605 602.

பெறுநர்
தலைவர்,
ஊராட்சி மன்றம்,
கீழ்புத்துப்பட்டு,
மரக்காணம் ஊராட்சி ஒன்றியம்,
திண்டிவனம் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

<u>ந.க.எண்.987 / 2013/ விம / நாள்— 10.07.2013</u>

அய்யா,

பொருள்: மனைப்பிரிவு – நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம், விழுப்புரம் மண்டலம், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், கீழ்புத்துப்பட்டு கிராமம் சர்வே எண்கள்:123/9பி,10,11ஏ,11பி, 12,13,124/14ஏ2,15—ல், 4.22 ஏக்கர் பரப்பு கொண்ட மனையிடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைத்தல் – உத்தேச சாலை மற்றும் பூங்கா பகுதியினை ஊராட்சிக்கு தானபத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்தல் – தொடர்பாக.

பார்வை: 1)தலைவர், கீழ்புத்துப்பட்டு ஊராட்சி மன்றம் கடிதம் எண். நாள் 17.06.2013.

2)மனுதாரர், M/s.ஹார்மோனி ரியல்டோர்ஸ், (சென்னை) பிரைவேட் லிமிடெட், அவர்களின் விண்ணப்பம், நாள் 13.06.2013.

3)நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7978/2012/ LA2, நாள் —19.04.2012 மற்றும் 24.05.2012

---

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், கீழ்புத்துப்பட்டு கிராமம் சர்வே எணகள்.123/9பி,10,11ஏ,11பி,12,13,124/14ஏ2,15—ல் 4.22 ஏக்கர் பரப்பு கொண்ட இடத்தில் பெறப்பட்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் விபரம் தெரிவிக்கப்படுகிறது.

உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான சாலைகள் மற்றும் பூங்கா அமைப்பு (Road Pattern and Park Reservation)களை காட்டும் தொழில் நுட்ப சாலை அமைப்பு வரைபடம் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

தொழில் நுட்ப சாலை அமைப்பு வரைபடத்தில் உள்ள சாலைகளை தமிழ் நாடு ஊராட்சிகளின் விதிகள் 1997 பிரிவு 3 (1)—ன்படி தார் சாலை ஊராட்சி மன்ற தலைவரால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் மனுதாரரால் அமைக்கப்படல் வேண்டும். அத்துடன் தேவையான பாலங்கள், சாக்கடை, வடிகால் துப்புரவு வசதி, தெரு விளக்கு ஆகியவை ஊராட்சி மன்ற தலைவரின் கருத்திற்கேற்ப மனுதாரரால் அமைத்து தரப்படல் வேண்டும்.

பார்வை 3—ல் கண்டுள்ள சுற்றறிக்கைகளின்படி தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட சாலை அமைப்பு வரைபடத்தின்படி சாலைகள், மூலை முடக்கு பகுதி, பூங்கா நிலங்களை தானம் வழங்கும் போது தானப்பத்திரத்தில் ஒவ்வொரு சாலைக்கும் எண்ணிடப்பட்டு, சாலையின் நீளம் மற்றும் அகலம் அளவுகள் மற்றும் பரப்பளவு குறிப்பிட்டும், நான்கு பக்க எல்லைகள் குறிப்பிடப்படல் வேண்டும். பூங்கா திறவிடம் போன்றவற்றின் நீளம், அகலம் அளவுகள் பரப்பளவு குறிப்பிட்டும், நான்கு பக்க எல்லைகள் குறிப்பிட்டும் வரைபடத்தில் எண்ணிட்டும், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் அவர்கள் கையொப்பமிட்ட வரைபட நகலையும் பத்திர பதிவு அலுவகத்தில் ஆவணமாக இணைத்து பதிவு செய்தல் வேண்டும்.

—தபிபா—

HARMONY AVAKASH HOMES PVT. LTD.
CHENNAI
600 004

Scanned by CamScanner

தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட சாலை அமைப்பு வரைபடத்தின்படி மனைப்பிரிவு சாலைகள் எல்லை வரை (Up to the end of boundries) சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதா என்ற உறுதி மொழியினை மனுதாரரிடம் பெற்றுக்கொண்டு அதனை உறுதி செய்து ஊராட்சி மன்ற தீர்மானம் நிறைவேற்றி, தீர்மான எண்ணுடன் தானப் பத்திரத்தில் ஊராட்சி மன்ற தலைவர் கையொப்பமிட்டு பத்திரம் பதிவு செய்யப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு தானப்பத்திரம் பதிவு செய்யப்பட்டதை உறுதி செய்து அத்தாட்சியிடப்பட்ட தானப்பத்திர நகல் மற்றும் ஊராட்சி மன்ற தீர்மானம், வில்லங்கச் சான்று மற்றும் சாலை அமைப்பின் புகைப்படங்களுடன் ஆகியவை ஊராட்சி மன்ற தலைவரால் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

10/7/2013

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
விழுப்புரம் மண்டலம்,
விழுப்புரம்.

9/07/13

<u>இணைப்பு</u>
சாலை அமைப்பு வரைபடம்.

<u>நகல்</u>
M/s.ஹார்மோனி ரியல்டோர்ஸ், (சென்னை) பிரைவேட் லிமிடெட்,
மூகாம்பிகா காம்ளக்ஸ்,
எண்.4,தேசிகாச்சாரி சாலை,
மைலாப்பூர்,
சென்னை—600 004.

Scanned by CamScanner